# *மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசியல் பங்குபற்றுதலில் பால்நிலை சமத்துவத்தை உறுதிப்படுத்துவதில் காணப்படும் பிரச்சினைகளும் சவால்களும்*

**Mr.V.Gunaratnam**

Department of Social Sciences, Eastern University of Sri Lanka.
(jathugunam@gmail.com)

***ஆய்வுச் சுருக்கம்***

**ஆய்வுப்பின்னணி**

அரசியலில் பால்நிலை சமத்துவம் என்பது இலங்கையில் மட்டுமல்ல உலகம் பூராவும் எதிர் கொள்ளப்படுகின்ற பிரச்சினையாகும். ஆணுக்கும் பெண்ணிற்குமிடையில் அதிகார இடைவெளியென்பது பொதுவாகவே காணப்படுகின்றது. பாராளுமன்ற, நிருவாக ரீதியான அதிகாரங்களை அடைவதில் பெண்கள் பலசவால்களுக்கு முகம் கொடுக்க நேரிடுகின்றது. பெண்கள் ஆண்களைவிட கல்வியில் குறைவுடையோராகவும், குறைவான வேலைவாய்ப்புச் சந்தர்ப்பங்களை கொண்டவர்களாகவும். பொதுவாக காணப்படுகின்றனர். இப்படியான பின்தங்கல்களுக்கு மத்தியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசியல் பங்குபற்றுதலில் பால்நிலை சமத்துவம் ஒன்றை ஏற்படுத்துவதென்பது சவால்களும் பிரச்சினைகளும் நிறையப் பெற்ற ஒன்றாகும். சமூகத்தில் வறுமை, நலிவீனம் போன்றவற்றிற்கு பால்நிலை அசமத்துவம் பாரபட்சம் என்பவை காரணமாகும். வாழ்வாதாரம் சார்ந்த பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு தேவையான தனிமனித ஆற்றல்களுக்கு அறிவு, வளம் என்பவற்றின் தேவை இன்றியமையாதது. உயர்கல்வி மட்டங்கள், சமூக ஒருங்கிணைவு என்பன பொருளாதார நலன் சார்ந்த விடயங்களில் மட்டுமன்றி சமத்துவம் சார்ந்த காரணிகளிலும் தாக்கத்தை செலுத்துவனவாகும்.

அரசியல் பங்குபற்றுதல் என்பது ஜனநாயக நாடுகளில் ஜனநாயகச் செயன்முறையை அணுகுமுறையைப் பலப்படுத்துவதற்கு தேவையான மிகமுக்கியமான கருவாகும். அரசாங்கத்தின் உருவாக்கம், அதன் இயக்கம் போன்றவற்றுக்கு அடிப்படையாக இருப்பது அரசியற் பங்குபற்றுதலாகும். இது ஒவ்வொரு பிரஜையினதும் தனிப்பட்ட செயற்பாடாகும். இது உளவியல் ரீதியான அணுகுமுறையாகும்.

வளர்ச்சியடைந்த நாடுகளில் பெண்களின் அரசியற் பங்குபற்றல் அதிகரித்துக் காணப்படுகின்றது. ஆனால் தென்னாசியாவில் குறிப்பாக இலங்கையில் பெண்களின் அரசியற் பங்குபற்றல் மிகவும் குறைவாகவே உள்ளது. தென்னாசியாவைப் பொறுத்தவரையில் தனது கணவன் அரசியிலில் இருந்து ஏதோஒரு காரணத்தினால் விடுபடுகின்ற பொழுது அவ்வெற்றிடத்தை நிரப்புபவர்களாக அரசியலில் பெண்கள் தலைமை தாங்குகின்ற பண்பை மிகவும் நுணக்கமாக அவதானிக்கலாம். அது ஒருவகையில் குடும்ப ஆதிக்க அரசியற் கலாசாரத்தை ஏற்படுத்தி விடுகின்றது எனலாம்.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொருத்த வகையில் ஆண்களின் அரசியற் பங்குபற்றுதலே அதிகரித்துக் காணப்படுகின்றது. நகர்ப்புறங்களில் பெண்களின் அரசியற் பங்குபற்றல் சற்று அதிகமாகவும் கிராமப் புறங்களில் பெண்களின் அரசியற் பங்குபற்றல் குறைவாகவும் காணப்படுகின்றது. இருந்த போதிலும் பெண்களின் மத்தியில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சி முரண்பாட்டு யுத்தம் நிறைவடைந்தமை, கல்விமட்டம் அதிகரித்தமை, தொழில் வாய்ப்பு போன்ற பல காரணிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் பெண்களின் அரசியற் பங்குபற்றுதலை சற்று அதிகரித்துள்ளது எனலாம். அதற்கு அரசியற், சமூக, உளவியல் காரணிகள் முக்கியமான ஏதுக்களாக அமைந்துள்ளன.

**ஆய்வுப்பிரச்சினைகள்**

அரசியலில் சமத்துவம் என்பது கலாசாரக் காரணிகள், அறிவியல் குறைபாடு, பொருளாதார நெருக்கடிகள், ஆணாதிக்கம் போன்ற பிரச்சினைகளினால் சாலாலுக்குள்ளாக்கப்படுகின்றது. பண்பாட்டுப் படிநிலை சார்ந்த வாழ்க்கைக் கோலங்கள் பால்நிலை அசமத்துவத்தை பொருளாதார ரீதியான நன்மைகளில் மட்டுமன்றி சமூகத்தில் திடமான பொருத்தமற்ற செயன்முறைகளில் கூட ஈடுபடுத்தி விடுகின்றது. இது சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் பால்நிலை அசமத்துவத்தை சாத்தியமாக்கி விடுகின்றது.

மரபுரீதியான பெண்கள் வீட்டுப் பராமரிப்பிலும், பிள்ளை வளர்ப்பிலும் தொடர்புடைய பொறுப்புக்களுடன் இணைக்கப்பட்டவர்களாக நோக்கப்படுகின்றனர். அவர்களது பொதுத்தனம் சார்ந்த சமூகம் பொறுப்புக்கள் என்பது அங்கீகரிக்கப்படாதனவாகவே காணப்படுகின்றது. பெண்களது ஆற்றல்கள் பொருளாதார ரீதியாக பெறுமதியளிக்கப்பட்டவையல்ல. அவைவீடு

சார்ந்த பொறுப்புக்களின் அடிப்படையில் கலாசார ரீதியாக பெறுமதியளிக்கப்பட்டவையாகும். இக்காரணிகளின் தாக்கங்கள் சமூகத்தில் அரசியல் அதிகாரம் சார்ந்த அடிப்படையில் ஆண்,பெண் இருபாலாருக்குமிடையில் பாரிய இடைவெளியை தோற்றுவிக்கின்றது. இலங்கையில் இது மிகப்பெரிய அளவில் இனங்காணத்தக்க விடயமாவதோடு இந்த இடைவெளியை குறைப்பதற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

**ஆய்வின் நோக்கங்கள்**

1. ஆய்வுப் பிரதேசத்தில் அரசியலில் பெண்களின் பங்குபற்றுதலுக்கு தடையாகவுள்ள காரணிகளை இனங்காணல்.
2. ஆய்வுப் பிரதேசத்தில் அரசியிலில் பால்நிலை அசமத்துவ நிலைப்பாட்டை விபரித்தல்
3. மட்டக்களப்பு மாவட்டத்தில் பெண் அரசியற் பங்குபற்றலினை ஊக்குவிப்பதற்கான முன்மொழிவுகளை வழங்குதல்.

**ஆய்வுமுறைமையியல்**

இவ்வாய்வு தர ரீதியான மற்றும் எண் ரீதியான முறைமையியலை கொண்டதாக அமையும் முதனிலை மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் இவ்வாய்விற்கான தரவு மூலங்களாக காணப்படுகின்றன. முதனிலைத் தரவுகள் வினாக்கொத்து மற்றும் நேர்காணல்கள் என்பவற்றின் ஊடாக திரட்டப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைதரவுகள் நூல்கள், சஞ்சிகைகள், மற்றும் பத்திரிகைகள் என்பவற்றினை மையப்படுத்தி பெறப்பட்டுள்ளது.

**இலக்கியமீளாய்வு**

சரவணன் - என், எழுதிய இலங்கை அரசியலில் பெண்களும் பெண்களின் அரசியலும் என்ற நூலில் இலங்கையின் அரசியல் வரலாற்றில் பால்நிலை சமத்துவம் என்ற விடயத்தின் ஆரம்பம் எவ்வாறு பிரதிபலிக்கப்பட்டது என்ற விடயம் விளக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் பெண்களின் அரசியல் பங்குபற்றலின் குறுக்கு வெட்டுமுகத் தோற்றங்கள் அதில் காணப்பட்ட ஏற்றத்தாழ்வான அம்சங்கள் முதலான உள்ளார்ந்த பிரச்சினைகளை அரசியல் சமூயகவியல் சார்ந்த அரசியல் தளத்தில் நின்று ஆராய்ந்துள்ளார். இதன் பொருட்டு வரலாற்று பகுப்பாய்வு முறையை கையாண்டுள்ளார். எவ்வாறாயினும் பாராளுமன்ற அரசியல் தளத்திலான பெண்களின் பங்களிப்பை மட்டுமே இந்நூலாசிரியர் கவனம் செலுத்தியுள்ளார். உள்ளுராட்சி, மாகாணசபைகள் ஜனாதிபதித்துவ விடயங்கள் ஆகியவற்றில் பெண்களின் பங்குபற்றல் பெரும்பாலும் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

குமாரி ஜெயவர்த்தனா எழுதிய மூன்றாம் உலகில் பெண்ணியமும் தேசியமும் என்ற மொழிபெயர்ப்பு நூலின் மூன்றாம் உலக நாடுகளில் இடம்பெற்ற தேசிய அரசியல் எழுச்சி, தேசியவாத இயக்கங்களின் வளர்ச்சி இவற்றுக்கு இணையாக பெண்ணிய அரசியல் என்பது பெண்களின் அரசியல் பங்குபற்றல் மீதான ஈடுபாடு என்பதும் எவ்விதமான வளர்ச்சி பெற்றுள்ளது என்பதை பகுப்பாய்வு செய்துள்ளார். எனினும் தேர்தல் முறைமை சார்ந்த அரசியல் செயல் முறைகளுள் பெண்களின் பங்குபற்றலை இவர் தனியே ஆய்வு செய்ய தவறிவிட்டார்.

Kiribamune, srima. Women and Politics in srilanka. A Comparative perspective என்ற நூலின் ஆசிரியர் இலங்கையில் பெண்களின் அரசியல் பங்குபற்றலை ஒப்பிட்டு நோக்கின் அடிப்படையில் ஆய்வு செய்துள்ளார். இதற்காக இந்நூலாசிரியர் தேர்ந்தெடுத்த புள்ளிவிபரங்களை கூடியளவு சம்பவ கற்கைகளில் எடுத்தாண்டுள்ளார். எவ்வாறாயினும் தேசிய அரசியல் தளத்தில் சிறுபான்மை இனப் பெண்களின் அரசியல் பங்குபற்றல் பற்றி கூடியளவு அதிக கவனம் செலுத்தப்படவில்லை.

Drude Dahberupt and Josefa Francisco, Gender. Governance democracy: women in politics என்ற நூலில் வெவ்வேறு தேர்தல் முறைமைகளின் கீழ் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்கான தந்திரோபாயங்களை மிக விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. உலகமயமாக்கல் இடம்பெறும் சமகால சூழலில் அரசியல் மற்றும் ஆட்சித் துறைகளில் பெண்களின் பங்குபற்றல் என்ற விடயம் எத்தகைய சவால்களை சந்திக்கின்றது அவற்றுக்கு எவ்வாறு முகங்கொடுக்கலாம் என்பது தொடர்பாகவும் ஆழமாக பகுப்பாய்வை இந்நூலில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெரும்பாகமான நோக்கு பிரதிபலிக்கப்பட்ட அளவு இந் நூலின் நுண்பாகமான விடயங்களில் கூடியளவு கவனம் செலுத்தப்படவில்லை.

Pamela Paxton and Melanie M.Hughes, Women, politics and power: A global Perspective, என்பதில் அரசியலில் பெண்கள் வலுவாதிக்கம் என்பன சார்ந்து உலகலாவிய பார்வையை இந்நூலாசிரியர்கள் முன்வைத்துள்ளனர். இதன் பொருட்டு விரிவானதும் ஆழமானதுமான பால்நிலை அரசியல் கோட்பாடுகளை பயன்படுத்தியுள்ளனர். அரசியல் தளத்தில் பெண்களின் பங்குபற்றலை விஞ்ஞான ரீதியாக மதிப்பீடு செய்யவும் சில முக்கிய கருத்துக்களை துணியவும் மிகவும் உதவிகரமாக அமைகின்றது இந்நூல், இவ்வாறு பெண்களின் அரசியல்

பங்குபற்றலை பொதுவான அம்சங்களை மேற்படி இந்நூல்கள் ஆராய்ந்துள்ளன. இருந்த போதிலும் இலங்கையில் குறிப்பாக மட்டக்களப்பில் பெண்களின் அரசியல் பங்குபற்றலை ஆராயாமால் பொதுவான ஒரு இடைவெளி காணப்படுகின்றது. அந்த இடைவெளியை ஓரளவேனும் நிரப்பும் அளவிற்கு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வின் வெளியீடுகள்**

அ) இலங்கையில் அரசியல் பங்குபற்றலில் பெண்கள் எதிர் கொள்ளும் தடைகளை இவ்வாய்வு விபரிக்கின்றன.

ஆ) இலங்கையில் பெண்களின் அரசியல் பங்குபற்றுதலை உயர்த்துவதற்கான வழிகளை சுட்டிக்காட்டியுள்ளது.

**ஆய்வின் விளைவுகள்.**

அ) இலங்கையில் அரசியலில் பெண்களின் பங்குபற்றுதல் தொடர்பான விழிப்புணர்வை உருவாக்க உதவும்.

ஆ) இலங்கையில் சமத்துவமான அரசியல் பங்குபற்றுதலுக்கு ஏதுவான கொள்கை உருவாக்கங்களுக்கு உதவியாக அமையும்.

**முடிவுரை**

அரசியற் பங்குபற்றல் என்பது ஒவ்வொரு மனிதனது அடிப்படை உரிமையாகும். அதன் மூலமே மொத்த அரசியற் பங்குபற்றுதலும் தீர்மானிக்கப்படுகின்றது. உள்ளூராட்சி மன்றங்கள் மாகாணசபைகள், பாராளுமன்றம், ஜனாதிபதி ஆகியவற்றுக்கான தேர்தல்களின் போது பெண் வேட்பாளர்களின் வீதாசாரம் மிகவும் குறைந்த மட்டத்திலே காணப்படுகின்றது. அதாவது இலங்கை சனத்தொகையில் அரைவாசிக்கு மேற்பட்ட பெண்கள் காணப்பட்ட போதிலும் 6%மே அரசியற் பிரதிநிதித்துவம் தற்பொழுது காணப்படுகின்றது. பொதுவாக பெண்களைப் பொறுத்த வரையில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டப் பெண்கள் அவதானிக்கின்ற பொழுது தேர்தல் காலங்களில் வாக்களிப்பது மட்டும்தான் அரசியற் பங்குபற்றல் என்ற கருத்துநிலை காணப்படுகின்றது. இந்த உளவியல் ரீதியான மனப்பாங்கை மாற்றியமைக்க முயற்சி எடுக்க வேண்டும். அதற்கு சமூக நிறுவனங்கள், கல்விக்கூடங்கள், ஆண்களின் ஆர்வம், பெண்களின் விழிப்புணர்ச்சி பெண்களின் உளவியல் மனப்பாங்கு போன்ற பல காரணிகள் செல்வாக்குச் செலுத்தும் பொழுது மட்டக்களப்பு மாவட்டத்தில் பெண்களின் அரசியற் பங்குபற்றலை அதிகரிக்க முடியும் என்றால் அது மிகையாகாது.

**உசாத்துணை நூல்கள்**


1. சரவணன் என். இலங்கை அரசியலில் பெண்களும் பெண்களின் அரசியலும் (2001), மூன்றாவது மனிதன் பதிப்பகம் கொழும்பு
2. குமாரி ஜெயவர்த்தனா எழுதிய மூன்றாம் உலகில் பெண்ணியமும் தேசியமும் (2003) (முதலாம் பாகம்),சமூக விஞ்ஞானிகள் சங்கம், கொழும்பு.
3. Drude Dahberupt and Josefa Francisco, Gender. Governance democracy: women in politics (2005), Isis international – manila publication, Philippians
4. Kiribamune, Srima, Women and Politics in Sri Lanka. (1999) Publication ICES Colombo.
5. Pamela Paxton andMelanie M.Hughes, Women, politics and power: A global Perspective, (2014), university of Pittsburgh, sage publication London



***கலைச்சொற்கள்:*** அரசியல் பங்குபற்றல், சமத்துவம், பால்நிலை அசமத்துவம்